சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**<u>ஆணை நாள் 06.07.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**<u>வழக்கு எண். SA 17168/E/2024</u>**

திருமதி.நாகேந்திரதேவி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
தண்டையார்பேட்டை வட்டம்,
சென்னை மாவட்டம் - 600 081.

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திருமதி.நாகேந்திரதேவி அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திரு.அங்கையா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தண்டையார்பேட்டை வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 29.04.2024 |
| **<u>கோரிய தகவல்</u>**, 01.02.2024 தேதியில் அனுப்பியுள்ள மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், தனது வீட்டின் சொத்து பட்டா புல எண்.20/47-க்கு கணினி பட்டாவில் தவறிவிட்டது எனவும், ஆகையால் தவறிவிட்ட புல எண்.20/47 கணினியில் ஏற்ற முடியுமா? முடியாதா? முடியாது என்றால் இதன் விபரம் உள்ளிட்ட 3 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், | |

| | |
|---|---|
| வட்டாட்சியர், தண்டையார்பேட்டை, வருவாய் கோட்டாட்சியர், மாதவரம், அவர்களுக்கு மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), சென்னை அவர்களின் 19.06.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சென்னை அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது அதன் விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 14.06.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 07.07.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய பட்டாவானது தங்கள் அவலகத்தால் 11.02.2026 அன்று வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் விபரம் மனுதாரருக்கு தங்கள் அலுவலக கடித ந.க.எண்.அ3/1163/2026, நாள் 02.07.2026-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலரின் வாதத்தின் மீதான எதிர் வாதத்தினை எடுத்துரைதக்க மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.

2. பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் புல எண்.20/47-க்கு கணி பட்டா வழங்கக் கோரியதாக குறிப்பிட்டு அதுகுறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் 3 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

b) மனுதாரர் கோரிய கணிணி பட்டா மனுதாரருக்கு 02.07.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலரால் எடுத்துரைக்கப்பட்ட வாதத்தினை ஆணையம் பதிவு செய்கிறது.

c) ஆனால், மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள 3 இனங்களுக்கான தகவல் வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் ஏதும் இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தில் சமர்ப்பிக்கவில்லை.

d) எனவே, பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப் பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள 3 இனங்களுக்கான தகவல்களை, இனம் வாரியாக பட்டியலிட்டு, சட்டப் பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி, <u>அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,</u> ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று

ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது**.

e) மேலும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், தண்டையார்பேட்டை அவர்களுக்கு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

i. மனுதாரரின் 29.04.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை, சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பெற்றுக்கொண்டு, மனு பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும், பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வட்டாட்சியர், தண்டையார்பேட்டை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது**.

ii. மேலும், மனுதாரர் 14.06.2024 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை, முதல் மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டுள்ளார். மேற்படி மனுவினை பெற்றுக்கொண்டு, மனுதாரருக்கு தகவல் வழங்காத அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூலமான விளக்கத்தினை பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)/(நிலம்), சென்னை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

f) மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை குறிப்பிட்ட தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17168/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)/(நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை-01.

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தண்டையார்பேட்டை வட்டம், சென்னை மாவட்டம் - 600 081.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தண்டையார்பேட்டை வட்டம், சென்னை மாவட்டம் - 600 081.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி.நாகேந்திரதேவி,
எண்.22, 5-வது தெரு, ஆஞ்சநேய நகர்,
ராயபுரம், சென்னை - 600 013.

Copy to: File MP/PA-